## 63. விசுவாசத்தினால் நீதிமான் என்றும்

பல்லவி

விசுவாசத்தினால் நீதிமான்
என்றும் பிழைத்திடுவான்
விசுவாசியே கலங்காதே
விசுவாசியே பதறாதே

சரணங்கள்

1. விசுவாசம் இல்லா வாழ்க்கை
தேவனை பிரியப்படுத்தாதே
தம்மை தேடுபவர்க்கு
பலன் அளிப்பார் என்று விசுவாசி
- விசுவாசத்தினால்

2. தேவனின் வாக்குத்தத்ததை
ஆபிரகாம் பிடித்து கொண்டான்
தேவனை மகிமை படுத்தி
விசுவாத்தில் வல்லவனான்
- விசுவாசத்தினால்

3. நம்பிக்கை இல்லா சூழ்நிலையில்
தேவனை சார்ந்திடுவோம்
இல்லாதவைகளை இருப்பதுபோல
அழைக்கும் தேவன் நம் தேவன்
- விசுவாசத்தினால்